தினமலர்

526 மாணவர்களுக்கு பணி நியமன உத்தரவு

சூலூர் ● சூலூர் ஆர்.வி.எஸ்., கலை அறிவியல் கல்லூரியில், 526 மாணவ, மாணவியருக்கு, பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டது.

இதற்கான விழாவில், வேலை வாய்ப்பு அலுவலர் டியூக் மேதியல் எலியசர் வரவேற்றார். கல்லூரி செயலர் முகமது மூபாரக் தலைமை வகித்தார். முதல்வர் திருநாவுக்கரசு முன்னிலை வகித்தார். இயக்குனர் மஞ்சு ஆண்டறிக்கை வாசித்தார்.

விப்ரோ நிறுவனத்தின் மேலாளர் ஜேம்ஸ் ஸ்டீபன், 526 மாணவ, மாணவிகளுக்கு பணி நியமன உத்தரவு வழங்கி பேசுகையில், "கற்பதற்கு வயது வரம்பில்லை. கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்," என்றார். வேலைவாய்ப்பு அலுவலர் அருள் குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

ஆர்.வி.எஸ்.கலைக் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்

வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமண ஆணையை வழங்கும் பாரதியார் பல்கலை. வேலைவாய்ப்பு மற்றும் வழிகாட்டுதல் துறை பேராசிரியர் விமலா. உடன், ஐ.சி.டி. அகாதெமி துணைத் தலைவர் சி.அன்புத்தம்பி, கல்லூரி நிர்வாக அறங்காவலர் செந்தில் கணேஷ் உள்ளிட்டோர்.

சூலூர், ஏப்.10: சூலூர் ஆர்.வி.எஸ். கலைக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

இன்போசிஸ், விவெண்டா, லீமெரிடியன் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் பங்கு பெற்றன. இவற்றின் நேர்முகத்தேர்வில் 515 மாணவர்கள் வெற்றி பெற்று பணி நியமன ஆணைகளைப் பெற்றனர்.

கல்லூரி நிர்வாக அறங்காவலர் செந்தில் கணேஷ் பேசுகையில், மாணவர்கள் ஒரு நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்தால் குறைந்தபட்சம் இரு வருடங்களாவது தொடர்ந்து பணிபுரிய வேண்டுமென்றார்.

பணி நியமன ஆணைகளை வழங்கி ஐ.சி.டி. அகாதெமியின் துணைத்தலைவர் சி.அன்புத்தம்பி பேசுகையில், மாணவர்கள் பேச்சாற்றலை வளர்த்துக் கொள்வது அவசியம், மேலும் வளர்ச்சிக்கு உதவியவர்களை என்றும் மறக்கக்கூடாது என்றார்.

பாரதியார் பல்கலைக்கழக வேலைவாய்ப்பு மற்றும் வழிகாட்டுதல் துறை பேராசிரியர் விமலா பேசுகையில், தமிழகத்திலிருந்து அதிக அளவில் குரூப் 1 தேர்வில் வெற்றி பெற கடுமையாகப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்றார். கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலர் கு.அருள்குமார், வேலைவாய்ப்பு இயக்குநர் மஞ்சு உள்ளிட்டோர் பேசினர்.

தினமணி
Sat, 11 April 2015
epaper.dinamani.com/